**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 38/2023**

Deposition of the DW2

Name : மரியஆகஸ்டினாள்

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 24.07.2026.

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**முதல் விசாரணை**

நான் பஞ்சாயத்து தலைவர் ஆவேன். ராஜா என்பவர் வீட்டிற்கு செல்லகூடிய குடிநீர் இணைப்பு குழாயை கேபா மொரிபால் மற்றும் ஜேகாப் அருள்பாய் உடைத்துவிட்டார்கள். கல்லை கொட்டி பாதையை அடைத்துவிட்டாகள். நான் அதை அப்புறப்படுத்தி குழாயை சரிசெய்ய சொன்னேன், ஆனால் அவர்கள் செய்யவிடவில்லை. இரணியல் காவல் நிலையத்தில் மனு கொடுத்து அதன் அடிப்படையில் காவலர் உதவியுடன் குழாய் சரிசெய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைபானையில் எந்த விசியம் தொடர்பாக சாட்சியம் சொல்லவேண்டும் என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் இந்த

வழக்கு பொறுத்து எனக்கு தெரியும் என்னிடம் ஏற்கனவே மனு வந்துள்ளது. மேற்டி நபர்கள் குழாயை உடைத்ததை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அன்றைய தினம் கொடுக்கவில்லை மறுநாள் கொடுத்தேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் நான் தற்போது பதவியில் இல்லை அலுவலக கோப்பில் இருக்கும். மேற்படி சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் 01.05.2023 அன்று நடைபெற்றது. நான் 4 ஆம் பிரதிவாதி மனு கொடுத்ததான் அடிப்படையில் தாவா இடத்தை பார்த்தேனா அல்லது வாதிகள் குழாயை நேரடியாக பார்த்தேனா என்றால் மனுவின் அடிப்படையில் பார்வையிட்டேன், நேரடியாக பார்க்கவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாதியின் வீட்டுடன் குடிநீர் இணைப்பு முடிந்துவிட்டது என்றாலும் அதன் பின்பு தொடரவில்லை என்றாலும் சரியல்ல. 4 ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு தனியாக குடிநீர் இணைப்பு உள்ளது என்றால் சரிதான், அது வேறு வீடாகும், இது பின்னால் உள்ள சிறிய வீட்டிற்கு செல்லும் இணைப்பாகும். தற்போது சிறிய வீடு உள்ளதா என்றால் உள்ளது. 4 ஆம் பிரதிவாதி எனது உறவினரா என்றால் இல்லை. நான் 4 ஆம் பிரதிவாதியின் உறவினர் என்ற முறையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**